ஸ்ரீ

லோகரஞ்சனி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞாநாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் - க௦.] துர்முகி௵ மார்கழி௴. [எண் - க௨.

இதிகாசபுராணபிரகரணம்.

ஜாதியுற்பத்தி விவரம்.

ஸ்ரீமகாபாரதம், - சாந்திபருவம் மோக்ஷதர்மத்திலே க௮௮ - வது அத்தியாயம்.

பிருகு பாரத்துவாசர் சம்வாதம்.

பிருகு வாக்கியம்.

అసృజద్బ్రాహ్మణానేవం పూర్వంబ్రహ్మప్రజాపతీన్ ।
ఆత్మతేజోభినిర్వృత్తాన్ భాస్కరాగ్నిసమప్రభాన్ ॥

பிரமன்; தனது தேசசினாலே பிறந்தவரும் சூரியாக்கினிகளுக்குச் சமானமான பிரகாசமுண்டானவரும், பிராமணர்களென்று சொல்லத் தகுந்தவரும், பிரஜாபதிகள்=மனிதர்களுக்குத் தலைவருமானவர்களை இனிக்கூறும் வண்ணம், ஆதிகாலத்தில் சிருஷ்டித்தான்.

తతఃసత్యంచధర్మంచ తపోబ్రహ్మచశాశ్వతం ।
ఆచారంచైవశౌచంచ స్వర్గాయవిదధేప్రభుః ॥

பின்னர், பிரபுவான பிரமன் சத்தியத்தையும், தருமத்தையும், தபசையும், வேதத்தையும், சாசுவிதமான ஆசாரத்தையும், சுத்தத்தையும், சொர்க்கத்தை யடையும்பொருட்டு உண்டாக்கினான்.

దేవదానవగంధర్వాః దైత్యాసురమహోరగాః ।
యక్షరాక్షసనాగాశ్చ పిశాచామనుజాస్తథా ॥

ஓ! பிராமணோத்தமா! தேவர், தானவர், கந்தருவர், தைத்தியர், அசுரர், உரகத்தலைவர், இயக்கர், இராக்கதர், நகங்கள், பைசாசங்கள், அப்படியே மனிதர்களையும் படைத்தான.

బ్రాహ్మణాఃక్షత్రియాఃవైశ్యాః శూద్రాశ్చద్విజసత్తమ ।
యేచాన్యేభూతసంఘానాం వర్ణాస్తాంశ్చాపినిర్మమే ॥

அம்மனிதரில் அந்தணர், அரசர், வைசியர், சூத்திரர் முதலானவர்களையும், பிராணிக் கூட்டங்களுடைய ஜாதிகள், மற்றுமுள்ளவைகளையும் நிருமித்தான்.

బ్రాహ్మణానాం సితోవర్ణః క్షత్రియాణాంచలోహితః ।
వైశ్యానాంపీతకోవర్ణః శూద్రాణామసితస్తథా ॥

அந்தணருக்கு வெண்மைநிறம், அரசருக்கு சிவந்தநிறம், வைசியருக்கு பச்சைநிறம், சூத்திரருக்கு கருப்புநிறம் என்னும் வேறுபாடுகளை உண்டாக்கினான்.

பாரத்துவாசர் வாக்கியம்.

చాతుర్వర్ణ్యస్యవర్ణేన యదివర్ణోవిభిద్యతే ।
సర్వేషాం ఖలువర్ణానాం దృశ్యతేవర్ణసంకరః ॥

நான்கு வருணத்தாருடைய ஜாதிகளை நிறங்களினாலே வேறு வேறாகவுண்டாக்கப்பட்டதென்றால், எல்லா ஜாதிகளுக்கும் பலவித வர்ணக் கலப்புகள் காணப்படுகின்றனவே!

కామఃక్రోధోభయంలోభః శోకశ్చింతాక్షుధాశ్రమః ।
సర్వేషాంనఃప్రభవతి కస్మాద్వర్ణోవిభజ్యతే ॥

காமம், குரோதம், பயம், உலோபம், சோகம், எண்ணம், பசி, வருத்தம், எல்லாருக்கும் எமக்கும் உண்டாகின்றது. ஆகையால் எதனால் ஜாதிகள் பேதிக்கப்படுகின்றன!

స్వేదమూత్రపురీషాణి శ్లేష్మపిత్తం సశోణితమ్ ।
తనుః క్షరతి సర్వేషాం కస్మాద్వర్ణో విభజ్యతే ॥

வியர்வை, மூத்திரம், மலம், கபம், மயக்கம், இரத்தத்தோடுகூடிய சரீரம் எல்லாருக்கும் நாசமடைகின்றது. ஆகையால் எதனால் ஜாதிகள் பேதிக்கப்படும்?

జంగమానామసంఖ్యేయాః స్థావరాణాం చ జాతయః ।
తేషాం వివిధవర్ణానాం కుతో వర్ణవినిశ్చయః ॥

உயிருள்ளன உயிரில்லனவாகிய வஸ்துக்களுடைய ஜாதிகள் கணக்கில்லா. அவையன்றி பலவிதமான வர்ணங்கள் அவைகளுக்குண்டு. ஆகையால் ஜாதி நிச்சயம் எதனால் உண்டாகின்றது?

பிருகு வாக்கியம்.

న విశేషోఽస్తి వర్ణానాం సర్వం బ్రాహ్మమిదం జగత్ ।
బ్రహ్మణా పూర్వసృష్టం హి కర్మభిర్వర్ణతాం గతమ్ ॥

ஜாதிபேதங்களில்லை. இவ்வுலக முழுதுமுள்ள மனிதர்கள் முதலிய யாவரும் பிரம சம்பந்தமாகவே பிரமாவினால் ஆதிகாலத்தில் படைக்கப்பட்டு, செய்தொழில்களினால் ஜாதி பேதங்களை யடைந்தார்கள்.

కామభోగప్రియాస్తీక్ష్ణాః క్రోధనాః ప్రియసాహసాః ।
త్యక్తస్వధర్మా రక్తాంగాః తే ద్విజాః క్షత్రతాం గతాః ॥

காமபோகாதிகளில் ஆசையுற்று, கோபமுங் குரோதமு மடைந்து, சாகசசல்லாப முடைத்தாய், இரஜோகுணங்களைக் கைப்பற்றி, தமது கருமங்களைக் கைவிட்ட இருபிறப்பாளர்களென்னும் அந்தணர்களே அரசரானார்கள்.

గోభ్యో వృత్తిం సమాస్థాయ పీతాః కృష్యుపజీవినః ।
స్వధర్మాన్నానుతిష్ఠంతి తే ద్విజా వైశ్యతాం గతాః ॥

பசுக்களை மேய்க்குஞ் சீவனத்தையடைந்து, இரஜோ தமோகுணங்களை யுடையவர்களாய் உழவு தொழிலைச்செய்து தங்கள் சற் கருமங்களைவிட்ட அந்த இருபிறப்பாளரே வைசியத்தன்மையை யடைந்தார்கள்.

హింసానృతప్రియా లుబ్ధాః సర్వకర్మోపజీవినః ।
కృష్ణాః శౌచపరిభ్రష్టాః తే ద్విజాః శూద్రతాం గతాః ॥

சிவகாருண்ணியமின்றி கொலைத்தொழிலில் விருப்புற்று, பொய்யராய், உலுத்தராய், எல்லாத் தொழில்களாலும் ஜீவித்து, தமோகுணத்தையே கைப்பற்றிய சுத்தமில்லாத இருபிறப்பாளரே சூத்திரரானார்கள்.

ఇత్యేతైః కర్మభిర్వ్యస్తా ద్విజా వర్ణాంతరం గతాః ।
ధర్మో యజ్ఞక్రియా తేషాం నిత్యం న ప్రతిషిధ్యతే ॥

இவ்வண்ணமான கர்மங்களினால் வெவ்வேறான இருபிறப்பாளர்களே ஜாதிகளை யடைந்தார்கள். அவர்களுக்கு அறம், யாகத்தொழில் முதலியவைகள் எப்பொழுதும் விடத்தக்கினவல்ல.

ఇత్యేతే చతురో వర్ణా యేషాం బ్రాహ్మీ సరస్వతీ ।
విహితా బ్రహ్మణా పూర్వం లోభాత్త్వజ్ఞానతాం గతాః ॥

இவ்வாறு நான்கு ஜாதிபேதங்களுண்டாயின. அவர்களுக்கு வேதமயமான காயத்திரியை பிரமாவினால் ஆதிகாலத்தில் ஏற்படுத்தப்பட்டதோ, அவர்கள் உலோபத்தினால் அஞ்ஞானமாகிய தமோபாவத்தையடைந்தார்கள்.

బ్రాహ్మణా బ్రహ్మతంత్రస్థాః తపస్తేషాం న నశ్యతి ।
బ్రహ్మ ధారయతాం నిత్యం వ్రతాని నియమాంస్తథా ॥

அந்தணர்கள் வேதசம்பந்தமான கருமங்களையே கைக்கொள்ளத்தக்கவர்கள். அவர்களுக்குத் தவங்கெடாது. வேதமோதுதல், நித்திய விரதம், நியமங்கள் நாசமடையா.

బ్రహ్మ చైవ పరం సృష్టం యే న జానంతి తే ద్విజాః ।
తేషాం బహువిధాస్త్వన్యాః తత్ర తత్ర హి జాతయః ॥

పిశాచా రాక్షసాః ప్రేతాః వివిధా మ్లేచ్ఛజాతయః ।
ప్రణష్టజ్ఞానవిజ్ఞానాః స్వచ్ఛందాచారచేష్టితాః ॥

வேதம் மேன்மைபொருந்தியதாக சிருஷ்டிக்கப்பட்டது. யாவர் அவ்வேதத்தை யறியார்களோ அவர்கள் இருபிறப்பாளர்களன்று. அவர்கள் நடுவில் பிசாசுகள், இராக்கதர்கள், சவங்கள், அநேகமான மிலேச்ச ஜாதிகள், ஞானவிஞ்ஞான மில்லாதவர்கள், இஷ்டம்வந்தபடி தொழிலைச்செய்கின்றவர்கள், வெவ்வேறான ஜாதிகள் அநேகம் பிறந்தன.

ప్రజా బ్రాహ్మణసంస్కారాః స్వకర్మకృతనిశ్చయాః ।
ఋషిభిః స్వేన తపసా సృజ్యంతే చాపరే పరైః ॥

வேதமந்திரங்களாலே சமுக்காரமுடையவர்களாயும், தந்தங் கர்மங்களைச்செய்வதில் நிர்ணயமுடையவர்களாயுமிருக்கின்ற பிரஜைகளும், மற்றவர்களும் மேன்மை பொருந்திய இருடிகளாலும், அவரவர்கள் செய்யுந் தபசினாலும் (ஒவ்வோர் ஜாதிகளுக் குரித்தானவர்களாக) சற்பிக்கப்படுகிறார்கள்.

ఆదిదేవసముద్భూతైః బ్రహ్మమూలాక్షయావ్యయా ।
సాసృష్టిర్మానసీనామ ధర్మతంత్రపరాయణా ॥

வேதமே யாதியாகவுடையதும் அழிவில்லாததும், விரயமில்லாததும், யோகாநுஷ்டானமே முக்கிய ஸ்தானமாக வுடையதுமான மானச கற்பனை ஆதிதேவனாலே யுண்டாக்கப்பட்டது.

கஅசு - வது அத்தியாயம்.

பாத்துவாசர் வாக்கியம்.

బ్రాహ్మణః కేనభవతి క్షత్రియో వాద్విజోత్తమ ।
వైశ్యశ్శూద్రశ్చవిప్రర్షే తద్బ్రూహివదతాంవర ॥

விடை பகர்வதில் மேலானவரும், பிரமஞானியுமான ஓ! விப்பிரவிருஷ! ஒருவன் அந்தணன், அரசன், வைசியன், சூத்திரன் என்று எக்காரணத்தினால் ஆகின்றான். அதைச் சொல்ல வேண்டும்?

பிருகு வாக்கியம்.

జాతకర్మాదిభిర్యస్తు సంస్కారైస్సంస్కృతశ్శుచిః ।
వేదాధ్యయనసంపన్నః షట్సుకర్మస్వవస్థితః ।
శౌచాచారస్థితస్సమ్యక్ విఘసాశీగురుప్రియః ।
నిత్యవ్రతీసత్యపరః సవై బ్రాహ్మణఉచ్యతే ॥

எவன் சாதகர்மமுதலான சமுக்காரங்களினாலே சமுக்கரிக்கப்பட்டவனோ, சுத்தமுடையவனோ, வேதபடனசம்பன்னனோ, அறுவித கர்மங்களினாலே நிறைந்தவனோ, பரிசுத்தமான ஆசாரத்திலிருக்கின்றவனோ, நன்மனதோடு தேவதைகள், அதிதிகள் இவர்களுக்குப்படைக்கப்பட்ட அன்னத்தைப் புசிப்பவனோ, குருவிடத்தில் விசுவாசமுடையவனோ, நித்திய விரதத்தையடைந்தவனோ, சத்தியத்திலாசையுடையவனோ அவன் அந்தணனாகச் சொல்லப்படுகின்றான்.

సత్యందానమథాద్రోహః ఆనృశంస్యంత్రపాఘృణా ।
తపశ్చదృశ్యతేయత్ర సబ్రాహ్మణఇతిస్మృతః ।

சத்தியமும், தானமும், துரோகமில்லாமையும், இரக்கமும், இலச்சையும், தயையும், தபசும் எவனிடத்தில் காணப்படுகின்றதோ அவன் அந்தணனாகச் சொல்லப்பட்டிருக்கின்றான்.

క్షత్రజంసేవతేకర్మ వేదాధ్యయనసంగతః ।
దానాదానరతిర్యస్తు సవైక్షత్రియఉచ్యతే ॥

எவனானால் வேதபடனஞ் செய்கின்றனனும், பிராமணர்களுக்குத் தானஞ்செய்வதிலும், பிரஜைகளிடத்திற் கப்பம்வாங்குவதிலும், ஆசையுடையவனும் இராஜ தருமத்தை யுடையவனுமிருக்கின்றானோ அவன் அரசனாகச் சொல்லப்பட்டிருக்கின்றான்.

విశత్యాశుపశుభ్యశ్చ కృష్యాదానరతిశ్శుచిః ।
వేదాధ్యయనసంపన్నః సవైశ్యఇతిసంజ్ఞితః ॥

எவன் கண்ணுங்கருத்துமுடையவனாய் பசுக்களால் ஜீவனஞ்செய்கின்றானோ, உழவுதொழிலைச்செய்வதில் ஊக்கமுடையவனோ, பரிசுத்தவானோ, வேதபடனநிறைந்தவனோ அவன் வைசியனென்றே எண்ணப்படுகின்றான்.

సర్వభక్ష్యరతిర్నిత్యం సర్వకర్మకరోఽశుచిః ।
త్యక్తవేదస్త్వనాచారః సవైశూద్రఇతిస్మృతః ॥

எவன் தினந்தோறும் எல்லா வஸ்துக்களையும் உணவாகக்கொண்டு புசிக்கு மெண்ணமுடையவனோ, எவ்விததொழிலையுஞ் செய்பவனோ, சுத்தமில்லாதவனோ, வேதத்தைக்கைவிட்டவனோ, ஆசார மில்லாதவனோ, அவன் சூத்திரனாகச்சொல்லப்பட்டிருக்கின்றான்.

శూద్రేచైతద్భవేల్లక్ష్యం ద్విజేతచ్చనవిద్యతే ।
సవైశూద్రోభవేచ్ఛూద్రో బ్రాహ్మణోబ్రాహ్మణోనచ ॥

இதுவே சூத்திரனென்பதற்குக் குறிப்பாகவிருக்கும். இது பிராமணனிடத்தில் உண்டாகாது. அப்படிப்பட்ட குணங்களையுடையவன் சூத்திரன். அப்படிப்பட்டபிராமணனும் சூத்திரனேயாவன். அந்தணனன்று.

பாரதம்.

சோபமுமாசையுங் கோறலாற்றலும்
பாபமுமயக்கமும் படிறுரைத்தலுந்
தாபமுஞ்செருக்குமேற் றங்கவைகினோர்
தீபமேசூத்திரர் திறத்தினவரே.

பாரத வெண்பா.

அரசர்க்கரசே யறம்வளர்க்குஞ்சேயே
முரசக்கொடிவேந்தே முன்னம்—பிரசமலர்ப்
புங்கவன்றன்கைத்தொழிலாற்போந்தமனுநூலாண்
டுங்கருமத்தாற்சாதி தான்.

இவ்வாறு கூறிய நான்கு சாதிகளிடத்தினின்றும் பிரிந்த அநுலோம, பிரதிலோம, சங்கர சங்கரோற்பன்ன சாதிகளைப்பற்றி இப்பத்தாம் புத்தகத்தில் விளக்கிய "சாதிகளின் பிரிவு" என்னும் விஷயத்தில் தெளிவா யறியலாம்.

ஆனால், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்போர் பிரமாவினுடைய முகம், தோள், தொடை, பாதம் இவைகளினின்றுண்டாயினார்களென்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவாக இரஞ்சனியினிலே செப்பியிருக்கின்றனவே யெனின், அவை அந்தந்த இடங்களுக்குச் சமானமானவர்களென்னும் வர்ணனை யென்று முன்னமே வியகரித்திருக்கின்றோமாகையால் ஈண்டு மீண்டுஞ் சொல்லுவது வீணாகும். ஆனால், பிரமன் பூர்வ கர்மத்தின்பலனுக்கீடாக அந்தந்த கர்மத்தைச் செய்யுஞ் சாதியாக பிறப்பித்தானெனில் ஒருவாறு பொருந்து மெனக.

ஆரியர்காள்! நமது தேசத்தில் சாதிவரம்பு ஏற்படுத்தியது ஒவ்வொரு காரியமும் சீர்திருத்தமாக நடக்கும்பொருட்டே யென்று நாங்களின்றுணிபு. இவ்விஷயமாக நம்மிரஞ்சனியிற் பலவிடங்களிலே விவகரித்துக்காட்டி ஒவ்வோர் சாதிகளின் சாதக பாதகங்களையும் எடுத்துநாட்டியிருக்கின்றோம். இப்பொழுதும் அப்பிரசுரங்களி லொன்றாகிய பாரத வசனங்களைப்பெயர்த்தெழுதினோம். சாதியுண்டாவதும் கெடுவதும் அவரவர்கள் ஒழுக்கங் காரணமேயன்றி, பிறப்பு காரணமன்று ஒருவனுக்கு ஒழுக்கம் குறைவிலாதிருக்குமாயின், அவனே புண்ணியாத்துமா. பிறப்பு எவ்வளவு தல்லியமாயிருந்தும், ஒழுக்கமில்லாவிடின் அவனே பாபியினும் பாபியாயிருப்பான்

இவைகளையோராது, நல்லறிவுச்சுடர் கொளுத்தி, மறைந்திருந்த நாகரீகத்தை மீண்டுமுண்டாக்கும் இக்காலத்திலும், பிராமணாதி நால்வகைச்சாதிகள் தனியாகச் சிருட்டிக்கப்பட்டனவென்றும், ஒரு சாதியிற் பிறந்தவர்கள் மற்றொரு சாதியாருக்குண்டான மரியாதைகள் ஞானமிவைகளை யடையவேண்டு மெனின், அவை அநேக ஜன்ம புண்ணியவசத்தினாற் கிடைக்குமென்றும், கீழ்ச்சாதியிற் பிறந்தவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாய் ஒழுகினாலும் மேல் ஜாதியாருக்குண்டாகும் கௌரவமுண்டாகாதென்றும் பண்டிதர்கள் அநுவருக்கும் பாமரவார்த்தைகள் பரவிவருகிறது. இத்தியாதி சமுசயங்களை மேல் விளம்பிய பிருகு பாரத்துவாச சம்வாதமே தெள்ளென விளக்கும்.

இது நிற்க, உயர்ந்த சாதியார் தங்களொழுக்கங்களினின்று தவறிப்போனாலும், உத்தமமான ஜன்ம பூமியின் வாசனையினாலே, அவ்வொழுக்கத்தைச் சீர்திருத்திக்கொள்ளக்கூடும். தாழ்ந்த சாதியார் தங்கள் ஜன்ம பூமியின் வாசனையைத்தொட்டு, தாமும் உயர்ந்த சாதியாருக்குச் சமானமுடையோரென்று எவ்வளவு சாஸ்திர யுக்தி வசனங்களைக்கொண்டு வாதுசெய்யினும், அவை நிலை நிற்கா. ஆகையால் இவர்கள் தங்கள் பிறப்பின் ஒழுக்கத்தை விட்டு, சாஸ்திரங்களிற் கூறும் நல்லொழுக்கத்தைத்தொட்டு ஒழுகுவாராயின் அதுவே உயர்குலத்தார் ஒழுக்கத்தினும் மேலான ஒழுக்கமாகி உயர்பதவியை இகத்தினும் பரத்தினுந் தரும்.

இவைகளை முற்று மறந்து, சில கீழ்ச்சாதியார், இராஜீக பலத்தினாலும், தங்கள் புண்ணியபலனுக்கீடாகக்கிடைத்த திரவிய பலத்தினாலும் செருக்குகொண்டு அளவு மிஞ்சி, "அன்ன நடை நடக்கப்போய் தன்னடை) யுங் கெட்டது" என்பதுபோல்) கெடுகின்றார்கள். இனியேனும் அவர்கள் தங்கள் குலவொழுக்கத்தை சீர்திருத்திக்கொண்டு, நல்லொழுக்கத்திலிருந்து, மேற்குலத்தாரிலுள்ள நல்லொழுக்கத்தாருக்கு மரியாதையாய் நடந்து, தங்களுக்குவேண்டிய சாதகங்களையடைந்து, பாதகங்களை நீக்கிக்கொள்ளுவது கைவல்லியமும் நாகரீகமுமாகும்.

தற்காலம், பறையர், பஞ்சமர் என்னும் வழங்கும் கீழ்ச்சாதியார் முன்னுக்கு வரவேண்டுமென்று அவர்கள் ஆசை கொள்வது எமக்குஞ் சம்மதமே. இவ்விஷயமாக நாம் சில வருடங்களுக்கு முன்னமே மேல்சாதியாரைத் தூண்டியிருக்கின்றோம். ஆனால் இச்சாதியார் இப்போது தங்கள் நிலைமையும், தம் சாதியார்களிருப்பையும் சாவதானமாக யோசித்து, அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களுக்காக மேல்சாதியாரைக்கொண்டு முன்னுக்கு வராமல், மேல் சாதியார் பொறாமையுடையவர்களென்று தள்ளி, பரதேசத்தாரை நம்பி சொந்தமையானவழிக்கு விரோத விதைக்கின்றார்கள்.

அவ்விதையாவ தென்னவெனில், நமது ஆரிய சாஸ்திரங்களின்மேல் குயுக்தியைக்கொண்டு தூஷிப்பதும், அந்நியர் இந்தியாவின் மேல் சாதியாருக்கும், கீழ் சாதியாருக்கும் விரோதத்தை யுண்டாக்கி, அதனடுவில் நுழைந்து தங்கள் காரியத்தை முடித்துக்கொள்ளவிரும்புவதை நம்புவதுமேயாம். "அளவிற்கு மிஞ்சினால், அமுதமும் நஞ்சாகும்."

ஆரியமத சித்தாந்தப் பிரகரணம்.

ஐயவினு?

மாஆதிமைதங்கிய மாநிலந்தனில்வாழ் மாந்தர்யாவரும் உய்யும்வண்ண மிவ்வுலகுக்கோர் நற்பாகத்தருவாய், அகிலமெங்கும்பரவி அடுத்தவர்கள் ஐயமகற்றி, கொஞ்சமும் வஞ்சமிலாது தஞ்சமென்றோரை ரஞ்சிப்பிக்க, ஸ்ரீலோகரஞ்சனியெனும் மகுடம்பூண் டுன்னதமாய் வரும காமதேனுவாகிய இளம் வஞ்சியே! நின தங்க மெங்கும் ஆரணமே ஆபரணங்களாக அணிந்திருப்பதால் நின்பாலடைந்து இதனடியில் வரைந்த வென் சங்கைக்கு விடை உன்னையல்லாது அன்னிய ருரைப்ப தருமை யாதலால், யான்கொண்ட ஐயமெனும் மாசகற்றி, பரிசுத்தமாகிய நின்னணிகலனோடு இதையும் ஓர் அணிகலனாகப் பூட்டி, அருவையற்ற ஆன்றோரது நேத்திரோச்சவம் காட்டி, ஐயமற வென்சங்கையை யோட்டி, நின்பாலடைந்த யாவருக்கும் ஞானமிர்தமூட்டி, அஞ்ஞானந்தகாரத்தைவாட்டி யெங்கும் மங்களந் தங்க விடையுடன்வந்துன் தரிசனந்தருளுவாயெனநம்பி அன்புடன்வந்தனம் அமைகிழ்ந்து தந்தனன்:—

1. ஆத்மா ஆதியா, அநாதியா?
2. ஆதியாயின் உற்பத்தியெப்பொழுது?
3. அநாதியாயின் உற்பத்திக் கியாதுகாரணம்?
4. ஆத்மா பரிசுத்தமா, அபரிசுத்தமா?
5. பரிசுத்தமாயின் கர்மம் சம்பந்தமாவானேன்?
6. கர்மம் ஆதியா, அநாதியா, வந்தேறியா?
7. ஆத்மாவுக்குக் கர்மம் வந்தேறியாயின்யாதுகாரணம்.

இதற்கு விடையோடு மங்கிளமுடன் எங்குமுலாவி வருவாயாக.

T. C. V.

சங்கிரக விடை.

1. ஆத்மா அநாதியே.

2. ஆத்மா ஈச்சுரனுக்குச் சரீரபூதமா யிருப்பதால் ஈச்சுரனைப்போல் அநாதியேயன்றி ஆதியல்ல. இதற்கு உற்பத்தியே கிடையாது.

3. அநாதியாகிய ஆத்மா மாயைவசப்பட்டுத்தோன் றலு மறைதலுமாயிருப்பதே உற்பத்திக்குக் காரணம் போலிருக்கும்; உற்பத்தியல்ல.

4. ஆத்மா பரிசுத்தமே. அது நித்தர், முத்தர், முமுட்சு, கேவலர், சம்சாரி என்று ஐவகையாயிருக்கும்.

5. ஆத்ம வருக்கத்தாரில் சில்லோர் மாயை சம்பந்தமாவதால் கர்மத்தை யுடைய தென்பதாம்.

6. கர்மம் அநாதியே.

7. ஆத்மா கர்மத்தைப்பற்றலும்விடுதலுமாயிருப்பதால் கர்மம் வந்தேறிபோற்றோன்றும், வந்தேறியன்று. அக்கர்மம் இக்காலத்தில் சம்பந்தப்பட்டதென்று சுருதி கூறாமையாலும், இக்காலத்தில் உண்டாயிற்றென்று நிர்ணயிக்கப் படக்கூடாமையாலும் அநாதியேயாம்.

கருத்து.

சுருதியானது "నిత్యోనిత్యానాం" என்கிறபடி, ஆத்மா நித்தியமாயிருப்பதாகக் கூறுகின்றமையால் அநாதியாயிருக்கும். அது "అనాదిమాయయా సుప్తః" என்கிறபடி அநாதியாகவே மாயையில் அழுந்திவாடுவதாயும், கிஞ்சித்துவமுடையதாயு மிருப்பதால், "చేతనాచేతనానాం" என்கிறபடி சேதனம் அசேதனம் என்று இருவகையானப் பிரகிருதிகளாகிய எல்லைக் குட்பட்டிருக்கும். அது "విజ్ఞానఘనః" என்கிறபடி, பரிசுத்தமானதாயிருந்தாலும், "మాయాం తు ప్రకృతిం విద్యాన్మాయినం తు మహేశ్వరం" என்று, மாயை வசப்படாத பிரம்மத்தின் சந்நிதியில் ஊசியைக்காந்த மிழுப்பதுபோல், ஆத்மா மாயை வசப்பட்டுக் கர்மசம்பந்தமடைந்துளது. ஆனால் அது தன்சொரூபஞானத்தை யறிந்தவளவில், அம்மாயையைவிட்டு நித்தியசொரூபத்தையடைகிறதுஎன்றால்பரிசுத்தத்தையடைகிறது. ஆகையால், ஈச்சுரனும், ஆத்மாவும் மாயையும் நித்தியம். ஆத்மாவுக்கு, அழிவுமில்லை உற்பத்தியுமில்லை. "ఏకోబహూనాం" என்று ஆத்மாக்கள் அநேகமா யிருக்கிறபடியால், இயல்பாகவே பாசமற்ற நித்தியராகவும், மாயாசம்பந்தத்தைவிட்ட முத்தராகவும், பகவத்சந்நிதிசம்பந்தத்தை சதா கோருகின்ற முமுட்சுக்களாகவும், செனனம் சாயுச்சியம் என்னுமிரண்டையுமடையாமல் ஆத்மாவே பரமாத்மாவென்று மயங்கி, அத்தால் கைவல்லியம் என்கிற பெரும் பாழ்நிலத்தை யனுபவிக்கின்ற கேவலராகவும், கடவுளேயில்லையென்று சனனங்களிலடிபடுகின்ற சம்சாரிகளாகவுமிருக்கின்றார்கள்.

பரிசுத்தமான பரமாத்மா, ஜீவாத்மாக்களுக்கு வேறாக மாயை என்கிற அசுத்த வஸ்துவையுண்டாக்கியிருக்கலாமா? வென்றால், ஈச்சு

ரன் தனக்குச்சரீரமாயிருக்கும் ஆத்மாக்களைப்போல, விசித்திர சக்தியையுடைய மாயையையும் சரீரமாக வடைந்திருக்கிறபடியால், அம்மாயை அசுத்தவஸ்துவன்று. அது ஒளிக்கு இருள்போலவிருக்கும்.

இதற்கு லௌகிக திருஷ்டாந்தங்கள் இரண்டொன்று காட்டுகின்றோம். ஈச்சுரனும், ஆத்துமாக்களும், மாயையும்—எஜமான், சேவகன், வீடு என்பவைகள்போல. சேவகனும், வீடும் எஜமானனுக்குச் சொந்தம். இவ்விரண்டையும் ஆள்பவன் எஜமான். சேவகன் எஜமான்சேவையைச் செய்யாது விசித்திரமான வீட்டைச் சொந்தமாக வலிய ஆளப்புகுவது எஜமானுக்குத் துரோகமன்றோ? இவைபோல ஆத்மா சேவகனயிருந்தும், தானும், வீடாகிய மாயையும் அவ்வீசனுக்குச்சரீரமாயிருந்தும் அதாவது அவன் ஆள்பவைகளாயிருந்தும், அவன் ஆக்ஞையையும் சேவையையும் விரோதித்து அவ்வீட்டை யாளப்புகுவதினாலே குற்றத்திற் குட்பட்டு நசித்துப்போகிறான் அதாவது மாயையா விழுக்கப்பட்டு கர்மத்தை யடைகிறான்.

ஓர் வீதிவழியாக ஓர் ஸ்திரீ தன்னை யலங்கரித்துச் செல்லுகின்றாள். அவள் ஒருவரை மோகிக்கவந்தவ ளல்ல. அவள் விநோதமும் விசித்திரமுமுடையவள். அவள் போகும்வழியே இரண்டு ஆடவர் செல்லுகின்றார்கள். அவர்களில் ஒருவன் புத்தியை அவள்பேரில் வைத்து மயக்குள்ளவனாகின்றான். ஒருவன் அவளைத் திருணமாகவெண்ணி நடக்கின்றான். இவ்விருவரும் புத்திமான்களே, இருந்தும் அப்படிப்பின்சென்றது ஸ்திரீயின் குற்றமா? இல்லை, ஸ்திரீபோன்ற மாயையின் குற்றமா? இல்லை ஆனால் கிஞ்சித்துவமுடைய சில ஆத்மாக்களியல்பே. ஆனாலவை பரிசுத்தமாமோவெனின், செம்பிற்களிம்பும், நீரில் நுரையும், நெல்லில் உமியும் சகஜம்போல் ஆத்மாக்களுக்கியல்பாகையால் குற்றமின்றாம். என்றால், ஈச்சுரன் கருணையில்லாது பிறவிப்பெருங்கடலில் ஆத்மாவை வீழ்த்தலாமோவெனின், அவனும் அந்தரியாமிரூபேண கருணையைவீசி இரக்ஷித்து வருவதால் ஈசுவரன் மேலுங் குற்றமில்லை. இத்தத்துவங்களையறிந்தே ஆத்மாக்கள் பிறவிவிமோசனத்தை யடைந்து ஈச்சுரன் சாயுச்சிய வாழ்வாகிய நித்தியாத்துமத்தைப் பெற்று ஆனந்தமடைவதே ஆத்மலக்ஷணம்.

ஆரியமததூஷணபரிகாரப்பிரகரணம்.

ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தம தர்மமும்,

(ஓர் பிரசங்கபங்கமும்.)

(கடுகூ-ம் பக்கத்தொடர்.)

V—ஜாதி.

சர்மாவானவர், மானிடக்குழுக்களில் பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்பதுபோல், உருத்திரரை பிராம்மணர் என்றும், விஷ்ணு க்ஷத்திரியர் என்றும், பிரமா வைசியர் என்றும், சிலபிரமாணங்களைக்காட்டி, இவற்றிலும் உருத்திரர் அதிகரென்று குயுக்திகளைக்கொண்டு கூத்தாடி அடங்கினார். அவற்றில் இன்னவிடத்திற் கூறும் பிரமாணங்களென்னும் ஆகாரத்தை அவர்விளக்காவிடினுஞ் சற்று பரியாலோசிப்போமாக.

அவர், ["[illegible]" என்று ஸ்ரீசிவபெருமானை வேதம் துதித்தது"] என்றார். இப்பிரமாணத்தில் தேவன் என்று படிக்கப்பட்டிருக்கிறதே யொழிய சிவபெருமானைக்குறிக்க வில்லை. பின்னர் அவர்காட்டும் பிரமாணங்களால், சிவன் என்று அந்வயம் பண்ணவேண்டுமெனின், அவை கற்பனாலங்காரப்பிரமாணங்களாகையால் அவர்கொண்ட அர்த்தம் அநர்த்தமேயாம்.

பின்னுமச்சர்மா, ["[illegible]" என்ற பகுதியால், விஷ்ணுவை க்ஷத்திரியனென்றும், பிரமனை வைசியனென்றும்] கூறி மகிழ்ந்தார்.

இந்தப் பிரமாண தாற்பரியத்தை அவரறியாது பொருள்கூறியது அந்தகாரமயக்கென்க. விஷ்ணுவானவர் பிரம்ம ருத்திரேந்திராதிகளைக் காப்பாற்றுந் தன்மை யுடையராயிருத்தலால் க்ஷத்திரியரென்றும்; பிரம்மாவானவர் "[illegible]" என்ற வேதவாக்கியப்படி, இருஷிகளிற்றலைவனாகிய உருத்திரனையும், பிராம்மணத்துவம் பொருந்திய மகரிஷிகளையும் உண்டாக்குந் தொழிலை யுடையவராயிருத்தலால் வைசியனென்றும் வர்ணிக்கப்பட்டதே யன்றி, மனிதர்களுக்கு வரம்புகூறிய படி, ஜன்மத்தால் க்ஷத்திரிய வைசியனென்று கூறியதில்லையென்க. அவரபிப்பிராயப்படியாயின், வைசியனாகிய பிரமன் பிராம்மணர்களாகிய ருஷிகளை உத்பத்திசெய்வாரென்றால், பண்டிதர் சிரிப்பாரென்க.

மேலும் அச்சர்மா [" నాఋషిః కురుతే కావ్యం నావిష్ణుః పృథ్వీపతిః । నాదేవాంశో దదాత్యన్నం నారుద్రః క్రమపాఠకః ॥ " என்று ஸ்மிருதியில், இருஷிகளால் காவியமும், விஷ்ணுவால் உலகாள்வதும், தேவர்களால் அன்னதானம் செய்வதும் ஸ்ரீ ருத்திரமூர்த்தியால் வேதாத்தியயனமும் கிடைக்கும் என்று] அபிப்பிராயங் கொடுத்தார். இதனாலும் சிவன் பிராம்மணனென்றும், விஷ்ணு க்ஷத்திரியனென்றுங் கூறிமகிழ்ந்தார்.

உலகத்தில், ருஷிகளுக்கு யாதொரு உபத்திரவமும் வராமல் காப்பவர் க்ஷத்திரியராதலாலும், அவர்களாலேயே யாகத்தவம் முதலியன நடத்தவேண்டி யிருத்தலாலும் ருஷிகளாகிய சிவன்முதலியோரைக் காப்பாற்றி ரக்ஷித்தவர் விஷ்ணுவாகையால், அவ்வாறு பிராம்மணர், க்ஷத்திரியரென்று கூறப்பட்டதென்க. இவர் காட்டிய ஸ்மிருதியிலும், உருத்திரனால் கிரம வேதபாடத்தையேவிரித்தலால் இருஷிகளின் றன்மையே விளங்கிற்றென்க. விஷ்ணுவுக்குக் காப்பாற்றுந் தன்மையாகிய க்ஷத்திரியத் தன்மையைவிளக்களால் இகபரமிரண்டிற்கும் உத்தாரகனென்று இனிது பெறப்பட்டதென்க. அன்றியும், வேதாத்தியயனகாலத்தில், அச்சிவனும் மற்ற ருஷிகளும் " హంసఃసోం హంసఃసోహమితి ప్రణవేనాస్వనాదికరణరేఖయాహంసశ్శుద్ధోచ్చారణంకర్తవ్యమితి బ్రువాః " என்றித்தியாதிகளாகப் படிக்கவேண்டியிருப்பதால், இவர் பிரமை அடியோடொழிந்து, விஷ்ணுவே பிராம்மணரால் தியானிக்கத்தகுந்த பிரம்ம சொரூபரென்று விளங்கிற்றென்க.

மேலுமேலும் [" బ్రాహ్మణో భగవాన్ రుద్రః క్షత్రియః పరమో హరిః " என்றும் " శివబ్రాహ్మణ ఇత్యుక్తః క్షత్రియో విష్ణురుచ్యతే " என்றும் சொல்லியுள்ளது. ஆதலால், க்ஷத்திரியனாகிய விஷ்ணுவைக் காட்டிலும், பிராம்மணனாகிய ருத்திரன் உத்தமனென்பது நிர்விவாதம்] என்றடங்கினர்.

இவற்றிற்கும் இனி யாம் கூறுவது மிகையாகும். ஆனால், தேவர்களுக்குள்ளும் மூவர்களுக்குள்ளும் ஜாதி வியவகார மானது ஒருக்கநுங் கிடைக்கமாட்டாது. அப்படி அவ்வியவகாரமானது சாஸ்திரங்களிற் படிக்கப்பட்டாலும், அது உலகத்தார் உணரும்பொருட்டு, சிவன் மஹாஞானியாய், தமது தேவியாராகிய பார்வதியாருக்கு விஷ்ணுவினுடைய பிரதாபங்களை ஆங்காங்குவிளக்கிவந்தமையால், பிரம்மஞானியென்றும், விஷ்ணு, பிரமாவையும், சிவனையும் அடக்கிக் காப்பாற்றி ஒரே ரூபமாய் விளங்குகிறவராகையால், க்ஷத்திரியரென்றும், பிரமா இருஷிகளைப்போன்ற சிருஷ்டி செய்பவராகையால் வைசியரென்றும், " ఇంద్రే భ్యోద్రస్వజాయతే " என்றபடி, அம்மூவருடைய அநுக்கிரகத்தால், இந்திரன் முதலிய தேவர்கள், இராக்ஷதர்களால்வருந்துன்பங்களை அகற்றிக்கொள்ள வந்தனை வழிபாடுகளைச் செய்துவந்தமையால் சூத்திரர் என்றும் கொள்ளல் வேண்டும். ஆகையால் விஷ்ணுவென்னும் வியாபகன் எல்லாச்சாதியிலும் அந்தரியாமியாய் நிறைந்து காப்பாற்றுவதனால் அவனே பிராமணோத்தமனவன். ஒருக்கால் சர்மாவானவர், பிராமண வைசிய க்ஷத்திரிய சூத்திரர் முறையில் இரண்டாம் படியில் விஷ்ணுவை க்ஷத்திரியனாகக்கூறினமையால் உருத்திரர் அதிகரென்று சாதிக்க முன்வருவர் போலும், அப்போதும், க்ஷத்திரியனுக்கும் பிராமணனுக்கும்வேதாத்தியனஞ்செய்ய விதியுண்டாயிருக்கின்றமையால் இவர் வித்தியாசங்கொள்வது வீணேயொழியுமென்க.

இவ்வண்ணம் பலவிதமாக நாம் நிரூபித்துவந்ததில், ஸ்ரீவிஷ்ணுவேசர்வோத்தமனென்று பெறப்பட்டதென்க.—சுபம் ! சுபம் !!

தி ப. சேஷாத்திரி அய்யங்கார்,
பல்லாரி.

சந்தேக நிவர்த்தி பங்கம்.

ஸகலகலாவல்லியாய் புவனமெங்குங்குலவி அருமையற்ற அதிகாரிகள் மனதைக்கவர்ந்து ரமிக்கச்செய்யும், ஸ்ரீலோகரஞ்சனியென்னும் நங்காய் ! 1896ஹு ஆகஸ்ட்டுமீ 11உ ல் ஏழுமாதத் திளங்குழவியான லோகோபகாரி 28-நெ. பத்திரிகையில், 2-ம் பக்கத்தில் (சந்தேகநிவர்த்தி) என்றுவெளியிட்டதற்கு (உண்மைவிளம்பி) என்போரால், 19-10-96-ல் மேற்படி நிவர்த்திக்கு மறுப்பு என்று மகுடம் சூட்டிவிட்டதை நிசானுபவத்திற் கிணங்கத் தாங்காது தனம்ருதபான மிகுதியா லவளாயு மறந்து அது தன்னையு மறந்து இன்றளவுந் தூங்குவதைக்கண்டே, ஸ்ருதி ஸ்மிருதியாதிகளைக்கொண் டஞ்சாமல் மச்சரமற்ற மஹான்களது மனதை ஸதா ரமிக்கச்செய்யவல்லரஞ்சனியெனக் கண்டு நின்பால் விடுத்தனன். நீயேனும், நின்பருவத்திற் கிசைய வஞ்சாது தங்கத்தையொத்த வங்கக்கடல்போன்ற நின்னங்கத்தி விதைத் தங்கச்செய்து, வேதோக்த பிரமாணங்களோடு கூடிய, சந்தேக நிவர்த்தி

பங்கமென்னும் வங்கத்தையொத்த அவிழ்தாம்ருதத்தையூட்டி ஆகமபிரமாணபிமானபந்தரோகத்தையோட்டி நடுநிலைமை வாய்ந்த பொதுநோக்குடையார்க்கு அங்கைக்கனியெனக் காட்டி ஆகமப்பிரமாணதிகளால் பிரமிப்போரை வேதாகமப் பிரமாணதிகளால் ரமிக்கச் செய்வாயெனநம்பிவந்தனம் மிக்கமகிழ்வொடு தந்தனன். நம் லோகோபகாரியால் வெளியிட்ட சந்தேகநிவர்த்தி யென்னும் தலைப்பின்கீழ் உள்ளதைக் கண்ணுற்றனன். அகல் குப்புசாமியென்னும் நண்பரால் எழுதப்பட்டதின் சாராம்ஸம் யாதெனில், ருத்திரன் ஸ்வயமாய் விடபானம்பண்ணி நண்பரைப்போன்ற பசுக்களைக் காத்தாரென்று ஸ்காந்தத்திலும், பாகவதத்திலும் இருக்கிறதேயன்றி, போலிவைணவர்கள் சிவதூஷணைசெய்து கூறியபடி மகாவிஷ்ணு விஷமுண்டதாய்ச் சொல்லவில்லை, ஆதலால் ருத்திரன் தான் விடபானஞ்செய்ததே அல்லது விஷ்ணு செய்யவில்லையென்பது நிச்சயம்; ஆனால் ஒரே ஒருதடவையில் மட்டும் விஷ்ணு விடபானம் செய்ததாய் பாகவதத்தி லிருப்பதாயும், அதாவது கண்ணவதார காலத்தில் தவிர வேறே சமயத்தில் விஷ்ணு விடபானம் பண்ணினதாய்க் கூறவில்லையென்றும், மேலும் பேர்பெற்ற அப்பயதீக்ஷிதர் கிரந்தத்திலும் காளகூடவிடத்தை ருத்திரன் தானுண்டதென்றும், கண்ணவதாரத்தில் தவிர வேறே சமயத்தில் விஷ்ணுவிடபானம் செய்ததில்லையென்றும் தெற்றென விளங்கும் என்றும் கண்டிருக்கிறது.

இவ்வாறெழுதிய நண்பர்போல் குறைகூறாது உண்மைகூறி விடுவதே நலமெனக் கருதி பெரிய அந்தகாரத்தை நீக்குஞ் சிறியபிரகாசம் போல், ஆகமப்பஞ்சுப்பொதிக்கு ஆரண அனற்பொறி அணுவேனும் போருமெனக் கொண்டதோடு, ஆரணத்தையும், ஆகமத்தையும் ஆன்றுணர்ந்தோ ரொருக்காலுஞ் சமமெனச் சொல்லத் துணியாரெனத் துணிந் துண்மை கூறுவானாயினேன்.

தன்ஜனனத்தை மறைத்த தீக்ஷிதர் ஸ்ருதி ஸ்ம்ருதியாதிகளி னுண்மையையும் மறைத்தாரென்னும் பேர்பெற்ற தன்மையே. இதை ஓராது, போலி ஆகமவாதியனைப் போலும், பொரிமாவை மெச்சுவரொத்து, அடியிற்கண்டப் பிரமாணதிகளி னுண்மையை ஆன்றோர்பால் கேட்டுய்யாது வீணே போலி வைணவரென நண்பர் தூறினதும் விந்தையே! நண்பர் மகாவிஷ்ணு வென்று பலதடவையில் ஒத்துக்கொண்டதினாலேயே ருத்திரன்முதல் யாவரும் ஸ்வயமாய் யாதும்செய்ய வல்லரல்லரென்பது திண்ணம். இதையும் அபிமானபந்தத்தால் நினைத்திலர்போலும். "இட்டலேதுராமுண்டாகொடிகா" என்பதைப்போல், நண்பர், போலி வைணவரென தூஷித்து ஆகமப்பிரமாணதிகளையுங் காட்டாது பூட்டகமாய் ஸ்காந்தத்திலும், தீக்ஷிதர் கிரந்தத்திலும் பாகவதத்திலும் சொல்லுகிறது என்று சொல்லி பூஷித்தாரேயன்றி அவைகளிலுள்ள பிரமாணங்களையேனும் அடியில்கண்டவாறு விபரமாய் குறித்திலர். நண்பர் ராவணசந்நியாசியின் கொள்கையா யிருப்பினு மன்வாடமில்லை, இனியேனும் அருமையற்ற ஆகமப்பிரமாணதிகளைக் காட்டுவாரென நம்பி எதிர்பார்த்திருக்கின்றனன்.

(வேதப்பிரமாணம்.)

விஷ்ணு, ருத்திரனுகிற பாத்திரத்தினாலே விஷத்தைப் பானம்பண்ணுறென்று சுருதி ருக்குவேதத்தில், 8-ம் அத்தியாயத்தில், 23-ம் வர்க்கத்தில் (యస్యాగ్ర్యం యోదవం యోదివ్య దదృశే త్వేవ వనస్పతి (శ్రీమద్రుద్ర పాత్రేణ పిబత్సహ) என்கிறபடியே "முத்தைவென்றிடு முகிழ்நகைக்கன்னன்மாமொழியாய், இத்தலம் புகழ்ந்திட விளங் கிருக்குவேதத்தில், அத்தியாயமெட்டாவதி லடைவுதன்றுமல், வைத்த சிருபத்து மூன்றுனவருக்கத்தில்,—தேங்குசிர் புவன உருத்திரனபாத்திரத்தால், ஒங்கு நாரண னுகர்ந்தனன் விடத்தை யென்றோதும், ஈங்கிவ்வாறுரைத்திட்ட வேதப்பொருட்கிசைய, பாங்குசேர் புராணங்களும் பகர்ந்திடும்படிகேள்" என்கிறபடியே, விஷ்ணு உண்டு சேஷித்த விடத்தைப் பானம் பண்ணும்படி சிவனுக்கு நியமிக்க அதுவுந் தான் கேளோ பானம்பண்ணேனென்று அச்சுதாநந்தகோவிந்தஎன்கிற நாமத்ரயமஹாமந்திரத்தை பிரணவ நம: பதங்களுடனே உச்சரித்து புஜித்தாரென்பதற்குப் பிரமாணம. (అచ్యుతానందగోవిందంమంత్రమానుష్టుభం ఓమ్నమస్సంపుటీకృత్యాజపన్ విషధరోహర:) என்று பாத்மோத்தரம், 37-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலால், ஆகமாபிமான நண்பர் கொள்கைப்படி ருத்திரன் எக்காலத்தும் எவ்வகையிலும் ஸ்வயமாய் விடபானம் செய்திலாரென்பது அங்கைநெல்லிக்கனிபோல் ஆன்றோர்க்கு வெள்ளென விளங்கும்.

புருஷோத்தமன், மருவாய்.

பொதுப்பிரகரணம்.

"பாஷை."

"இந்திரற்கும் பிரமற்கு முதல்வன்றன்னை
இருநிலங்கால் றீர்விண் பூதமைந்தாய்ச்
செந்திறத்த தமிழோசை வடசொல்லாகித்
திசைநான்கு மாய்த் திங்கள் ஞாயிறாகி
அந்தரத்திற் றேவர்க்கு மறியலாகா
வந்தணனை யந்தணர்மாட் டந்திவைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும்
வாழ்தியேல் வாழலா மடநெஞ்சமே"

என்று, திருமங்கையாழ்வா ரருளிய செம்பொருட்பாவில், எல்லாப்பொருட்களுமாகி, அவற்றுள் அந்தரியாமியுமானபரனை "தமிழோசையும் வடசொல்லு" மானானென்றால், அவ்விரண்டும் பழமையான பாஷைகளென்றும், அவனைப்போல் நித்தியமானவைகளென்றும் சொல்லுவதற்குத் தடையில்லையன்றோ? இவற்றால் உலகத்திலுள்ள எல்லாப்பாஷைகளும் இவ்விருபாஷைகளுக்குஞ் சார்புடையனவேயன்றி வேறன்றே.

பாஷை என்பது சம்ஸ்கிருதம். சொல் என்பது தமிழ். பாஷை=சொல்=மொழி என்பன ஒருவன் தன்கருத்தை பிறனுக்கு அறிவிக்கக் கருவியான சப்தம்=ஒலிகளாம். இவ்வாதுங்கொண்டே "பாஷை" என்று வடதேசத்தாரும், "சொல்" என்று தென்தேசத்தாரும் வழங்குவதுண்டு "பாஷை=சொல்" என்னு முற்று கூறுமலே சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் ஒலிகளானே அவ்வப்பாஷைகளை யுணர்த்தும். மனிதர்க்கு எப்போதுமுள்ள பாஷைகள்போன்றே மிருகபாஷை, பட்சிபாஷை முதலியனவுண்டு. முடிவாக பாஷையென்பது சொற்றொடர் உருவகமாயிருக்கும். இவ்விந்துஸ்தானத்தில் எல்லாப்பாஷைகளும் வடமொழித் தென்மொழிகளுடன் கலந்து அந்தந்தப்பொருள்களுக்கு அறிகுறியாக அவ்வத்தேசத்தார் தங்கம் ஞானங்கட்கேற்ப ஏற்படுத்திக் கொண்டவைகள். இவ்வண்ணமே மிருகங்களும், பட்சிகளும் ஒலித்துக்கொண்டன. பாஷைகள் ஏற்பட்டவற்றிற்குக் காரணங்கள் நன்றாய் விளங்காவிடினும், அவை தோற்றம் உருவகங்களைக்கொண்டே யுண்டாயிருக்கலாமென்றும் ஆதியில் ஒரேபாஷையாயிருந்து, பிறகு பலபாஷையாயிற்றென்றும் பெரும்பாலர் கருத்து. இவ்வண்ணமானதும் உலகத்தில் ஒவ்வொருதிசையிலேயன்றி, எல்லாத்திசைக்கும் ஓரே பாஷை ஆதியாகநிற்காதென்பது அநுபவம்.

வடதேசமாகிய இந்துஸ்தானத்திற்கு ஆதியில் சம்ஸ்கிருதமும், தென்தேசத்திற்குத் தமிழும், இவ்விருபாஷைகளை யநுசரித்துப் பரவின பாஷைகளே மற்ற தீபாந்திரங்களில் முதலாக நிற்கும். இவற்றின் சார்பினாலேயே மற்ற பாஷைகள் அவ்வத்தேசங்களில் உண்டாயிருக்கலா மென்று முன்னங்கூறிய துணிபாம். சம்ஸ்கிருதபாஷையைக்கொண்டு மஹாராஷ்டிரம், இந்துஸ்தானி முதலிய பாஷைகளும, தமிழைக்கொண்டு மலையாளம் கன்னட முதலியவைகளும், ஹீப்புருவைக்கொண்டு இங்கிலீஷ் முதலியவைகளும் பிறந்திருக்கலாம். தெலுங்கு ஒரியா முதலியபாஷைகள் முறையே ஒவ்வொரு பாஷைகளிற் கலந்து பிரியப்பட்டவைகள். இக்கருத்தை ஒவ்வொருபாஷையுடையோர் முன்பின்னாக மாறி வைத்துங்கொள்ளலாம். ஆனால் அநுபவத்தில் முன்னையதெதுவென்று நன்றாய்ப் புலப்படுகிறபாஷையோ அதுவே ஆதிபாஷையென்று கொள்ளவேண்டும்.

தெலுங்குநாட்டாரிற் சில்லோர் தங்கள் பாஷையே உயர்ந்ததென்றும் மற்ற பாஷைகள் தாழ்ந்ததென்றும், தங்கட்கு வேறான பாஷைகளை யுணராமலே அபிமானப் பிராந்தியால் மருளடைந்து முக்கியமாய்த் தமிழ்ப்பாஷையைத் தூஷிக்கின்றார்கள். ஆகையால் நாம் அதைப்பற்றி விசாரிக்கத்தொடங்கினோம். இதனால் தெலுங்குபாஷையை நாம் குறைகூற முன்வந்தோமில்லை.

இந்துதேசத்தில் விசாலமாக நினைத்தவிஷயங்களைப்பேசவும் எழுதவும் சுருக்கமும் பெருக்கமுமடைந்திருக்கும் சம்ஸ்கிருத பாஷைபோன்றே தமிழும் தக்கநிலைமையுடையது. இவற்றிற் காதாரமானவை இலக்கியவிலக்கண நூற்கள். சம்ஸ்கிருதத்தில் அமர முதலிய கோசங்களிருப்பதுபோல, தமிழிலும் சூடாமணிமுதலிய நிகண்டுகளுண்டு. சிறிதுகாலத்திற்குமுன் தெலுங்கு பள்ளிக்கூடங்களில், அக்ஷராப்பியாசமானதும், பாலராமாயணம் அமரகோச முதலிய சம்ஸ்கிருத கிரந்தங்களையே அப்பியாசஞ் செய்வித்தார்கள். "அச்சதெலுங்கு" என்று அவர்கள் சொல்லிக்கொள்ளும் பாஷைக்குத்தக்க நிகண்டையுங் காணோம். "ஆந்திரநாமசங்கிரக" முதலியசில நூற்களிருந்தாலும் அவை சம்ஸ்கிருத மிசிர

மேயொழிய தனித்ததன்று. தமிழில் அக்குறைவு கிடையாது.

தெலுங்குபாஷை, கஞ்சம் விசாகப்பட்டணஜில்லாக்களிலுள்ள (ஒரியா) ஒட்டரபாஷையைப்பேசும் ஓர்வித நாகரீக மற்ற ஜனங்களிடத்திலிருந்து முன்னுக்கு வந்ததாகத் தெரியவருகிறது. அந்த ஒரியாபாஷை சம்ஸ்கிருதம், இந்துஸ்தானி, தெலுங்கும் கலந்து கின்றது. கன்னடபாஷை சமஸ்கிருதம் தெலுங்கும் தமிழும் அநுசரித்து வழங்குகின்றது. மலையாளம் சம்ஸ்கிருதம் தமிழுங்கலந்து வழங்குகின்றது. தமிழோ இத்தகைய விகாரமுடையனவல்ல. தமிழும் சம்ஸ்கிருதம் போன்ற தனித்த பாஷையென்று முன்னமே சொன்னோம். இவற்றால் மற்றப் பாஷைகளுக்குத் தமிழும், சம்ஸ்கிருதமும் தாயுந் தந்தையும்போன்ற பாஷைகளாம். தமிழைத் தனிமையான பாஷையென்றறியவேண்டுமோனால் தமிழ்ச்செய்யுட்களிலறியலாம். செய்யுட்களிலும் முன்னோர்சம்ஸ்கிருதபதங்களைத் திரித்து வழங்கியுமிருப்பார்கள். அது அவர்கள் சம்ஸ்கிருதபாண்டித்தியத்தைக் காண்பிக்கும் அறிகுறியேயன்றி வேறன்று.

அன்றியும் வடமொழிகளைத் திரிபுசெய்துக்கொள்ளும் வலிமை தென்மொழியிலுண்டு உதாரணம் பாஷை-பாடை. லோகம்-உலகம் சக்ஷு-சக்கு. லக்ஷணம் - இலக்கணம்முதலியவைகளாம். இத்திரிபால் அர்த்தபேதங்களடையுமென்பாரேல், அப்படியடையாமல் தமிழாகவழங்கும் பதங்களுமுண்டு. பாஷை=சொல்=மொழி=ஒலி. லோகம்=ஞாலம். சக்ஷு=கண். லக்ஷணம்= இயல் முதலியவைகளினுலென்றறிக.

இக்காலத்தில் எங்கும் ஆரியபாஷையே பரவியிருத்தலால், தமிழ் வசன ரூபங்களில் சம்ஸ்கிருதபதங்களில்லாமல் எழுதப்படுவதில்லை. இவற்றிற்கு மணிப்பிரவாளக் கோவையென்பதுண்டு. தமிழர் சம்ஸ்கிருத பாஷையை உச்சரிக்கத் தக்கவர்களல்லவென்றும், தெலுங்குபாஷையைப் படித்தே உச்சரிக்கத் தகுந்தவர்களாவாரென்றும் தெலுங்கர் கூறுகின்றார்கள். தெலுங்குபாஷை தென்னாட்டிற் பரவாமுன்னமே மணிப்பிரவாளமென்கிற கிரந்த லிபியினால் சம்ஸ்கிருதத்தையோதி வல்லவர்களானாரென்பது அநுபவசித்தம். மலையாள பாஷையில் அம்மணிப்பிரவாளம் தமிழ் லிபிகள் கலந்து நிறைந்து எப்பாஷையையும் ஓதியுணரத்தக்கதா யிருக்கின்றது. தமிழ்நாட்டாராகிய இராமாநுஜர், வேதாந்ததேசிகர், சங்கராசாரியார், அப்பையதீக்ஷிதர், நீலகண்டர் முதலியபிரமுகாள் பாஷ்யகர்த்தாக்களானதும் சம்ஸ்கிருதமோதினதும் மணிப்பிரவாள பாஷையேயன்றி தெலுங்குபாஷையினாலல்ல.

எல்லாப்பாஷைகளையும் தெலுங்கில் உச்சரிக்கலாமென்றும், தெலுங்கு பாஷையை தமிழ் பாஷை உச்சரிப்பதற்கு அக்ஷரக்குறையையுடையதென்றும், சிலதெலுங்கர் துணிபு. இக்கருத்தை எல்லாப்பாஷையாரும் சொல்வதற் கிடமுண்டு. தமிழிலுள்ள ழகர றகர சப்தம் தெலுங்கில் கிடையா. இதனால் தமிழிலுள்ள பழம் என்பதற்கு ஃபலம் என்றும், குற்றம் என்பதற்கு ஃஜூம் என்றும், வெற்றியென்பதற்கு ஜஜ் என்றும் தமிழொலிக்குத்தெலுங்கு ஒலித்தமேயல்லது நேரே அவ்வவற்றின் சப்தங்களை விளக்கா. இவைகளினால் எல்லாவெழுத்துகளும் நிறைந்ததும் தமிழினின்றும்பிரிந்ததுமான மலையாளபாஷை தெலுங்குபாஷையைக்காட்டிலும் சிறந்ததாகும். ஆகையால் தெலுங்கை விருத்திசெய்யாமல் தமிழை நிந்திப்போர் அபஜயமடைவர்.

ஸ்ரீ வானமாமலை மடத்தின் வரலாறு.

நாங்குனேரி என்று சர்க்காரில் வழங்குகிற வானமாமலை யென்பது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஓர் தாலூக்கா. வானமாமலை மடமானது தென்கலை வைஷ்ணவர்களனைவர்க்கும் லோகாசாரியஸ்தானமாய் விளங்குகிறது. அவருக்கு சிஷ்யகோடிகள் பரதகண்டம் முற்றிலுமிருக்கிறார்கள். திருப்பதியிலிருந்து இமயகிரிவரையில் உள்ள பிரதேசங்களில் இருக்கும் வைஷ்ணவர்களனைவரும் தென்கலையைச் சேர்ந்தவர்களே. தென்இந்தியாவிலுள்ள ஆழ்வார்களால் மங்களாசாஸனஞ் செய்யப்பட்ட நூற்றெட்டுத் திவ்யதேசங்களில் சுமார் ஆறு திருப்பதிகள் வடகலையாருக்கு உரியன. மற்றவைகளெல்லாம் மேற்சொல்லிய வானமாமலை மடத்துச் சம்பிரதாயத்தையும் மந்திரத்தையும் அனுசரித்தவை. தென்கலைவைஷ்ணவர்களுக்கு சமயாசாரியராகிய ஸ்ரீமணவாளமாமுனிகளுக்குப் பிரதமசிஷ்யர்தான் ஆதிவானமாமலை ஸ்வாமிகள். பூர்வம் வானமாமலை மடமும் கோயிலும் மலையாளம் நம்பூரி பிராமணர்களதீனத்திலிருந்தன. பிற்காலம் ஸ்ரீமணவாளமாமுனிகள் லோகாசாரியராகப் பிரபலம்பெற்ற காலத்தில் நம்பூரி பிராமணர்கள் மடத்தை

யும் கோயிலையும் ஆசாரியஸ்வாமிகளுக்கு ஒப்புவித்துவிட்டார்கள். இப்படி மடமும் கோயிலும் ஸ்வாமியினைச் சேர்ந்தன. அநேக காலம் தாமே மடத்திலெழுந்தருளி ஆசார்யாதிபத்தியத்தை நடத்திவந்து ஸ்ரீரங்கம் எழுந்தருளும் தருணத்தில் தாம் வகித்திருந்த பீடத்தை தம்முடைய பிரதமசிஷ்யரான ஆதிவானமாமலை ஸ்வாமிகளிடத்தில் ஒப்புவித்து தமக்குப் பிரதிநிதியாக சகல ஆதிபத்தியத்தையும் நடத்தும்படி அவருக்கு ஆக்ஞாபித்தருளினர். இவ்வாறாக ஆதிவானமாமலை ஸ்வாமிகள் தம்முடைய ஆசார்ய னெழுந்தருளியிருந்த பீடத்தைத் தாம் பெறும்படியான பெரும்பாக்கியத்தைப்பெற்றார். உடனே சந்நியாசியாசிரமம் வகித்து ஸ்ரீமணவாளமுனிகள் திருவுள்ளம் உகக்கும்படியாய் வெகுகாலம் ஆசார்யாதிபத்தியத்தை நிறைவேற்றிவந்தார். சிலகாலஞ் சென்றபின் தம்முடைய ஆசார்யரைக் கண்டு சேவிக்கும்பொருட்டு ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளினபொழுது வடதேசங்களில் யாத்திரைசெய்து விசிஷ்டாத்வைதசித்தாந்தங்களை சகல ஜனங்களுக்கும் விளங்கச்செய்து அநேக மடங்களையும் ஸ்தாபித்து வரும்படி ஆசாரிய நியமனம்பெற்று இமயகிரிபர்யந்தம் உள்ளதேசங்களில் ஸ்ரீ ஆதிவானமாமலை ஸ்வாமிகள் பாதசாரியாய் யாத்திரைசெய்து ஆசாரியருடைய ஆக்ஞையை நிறைவேற்றினர் உத்தரதேச யாத்திரையைப் பூர்த்திசெய்து திரும்புகையில் திருமலையில் வெகுகாலம் தபோநிஷ்டரா யெழுந்தருளியிருந்தார். ஸ்ரீமணவாளமாமுனிகள் தம்முடைய பிரதம சிஷ்யரான ஆதிவானமாமலை ஸ்வாமிகள் உத்தரதேசங்களில்சென்று தெரிசன ஸ்தாபனங்கள் செய்தவைகளையெல்லாம் செவிசாத்தி விசேஷமகிழ்ச்சியடைந்து ஸ்ரீவானமாமலைஸ்வாமிகளுக்கு வித்வத்துவமும் தபோமகிமையும் நிர்மலசித்தையும் ஆசார்ய பிரதிபக்தியும் க்ஞான வைராக்கிய முதலான திவ்யகுணங்களும் பரிபூரணமாயிருக்கக்கண்டு தமக்குப்பின் இவரே பீடத்தை வகிக்கப் பாத்திரர் என்று திருவுள்ளங்கொண்டிருந்தார். அவ்வண்ணமே தாம் பரமபதத்திற் கெழுந்தருளுங்காலத்தில் சமீபத்திலிருந்து கைங்கர்யங்கள் செய்துகொண்டிருந்த அண்ணங்கார் பட்டர் முதலான சிஷ்யர்களை நோக்கி அப்போது திருப்பதியி லெழுந்தருளியிருந்த வானமாமலைஸ்வாமிகளிடத்தில் தம்முடைய திருஆராதன எம்பெருமானான ஸ்ரீ அரங்கநகரப்பனை ஒப்புவிப்பதுடன் தம்முடைய உபதண்டத்தையும், பவித்திரத்தையும், பாதுகைகளையும் ஒப்புவித்துத் தம்முடைய பீடத்தையும் வகிக்கும்படி ஆக்ஞாபித்தருளினர். ஸ்ரீ மணவாளமாமுனிகள் பரமபதமடைந்த உடனே ஆசார்ய நியமனப் பிரகாரம் பட்டர் அண்ணங்கார்முதலான சிஷ்யர்கள் சிலஸ்ரீவைஷ்ணவர்களைத் திருமலையிலெழுந்தருளியிருந்த ஸ்ரீவானமாமலை ஸ்வாமிகளிடத்தில் அனுப்பி நடந்த விஷயங்களை யெல்லாம் விண்ணப்பம் செய்வித்ததின்மேல் ஸ்ரீவானமாமலை ஸ்வாமிகள் ஸ்ரீரங்கத்துக்கு உடனே எழுந்தருளி தம் ஆசாரியர் அனுக்கிரகித்த பிரசாதங்களையெல்லாம் பரிக்கிரகித்து, ஆசார்யபீடத்தில் வெகுகாலம் எழுந்தருளியிருந்து, பின்பு ஸ்வயம் க்ஷேத்திரங்களுக்குள் விசேஷமகிமை பெற்ற ஸ்ரீதோதாத்ரி என்று சொல்லப்பட்ட வானமாமலை மடத்தில் எழுந்தருளினர். தற்காலத்தில் பீடத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்வாமிகள் இருபத்து நான்காவது பட்டத்தை வகித்தவர். இருபத்துமூன்றாவது பட்டத்தைவகித்த ஸ்வாமிகள் பால்யத்திலேயே வைஷ்ணவ சம்பிரதாயக்கிரந்தங்கள் முழுமையும் பரிசோதித்தறிந்தவரா யிருந்ததுடன் ஸமஸ்கிருதபாஷையில் அளவிறந்த ஞானத்தை யுடையவராயும், தர்க்கம், வியாகரணம், வேதாந்தம் முதலான சாஸ்திரங்களில் அபரிமிதமான பாண்டித்தியத்தையும் பெற்றவராயுமிருந்தார். அப்பால்யமாரப்பிய ஸ்வாமிகள் உலகத்தை வெறுத்து பிரம்சாரி யாசிரமத்திலிருந்தே சந்நியாசி ஆசிரமம் பெற்று ஸ்ரீவில்லிபுத்தூரில் க்ரந்த காலக்ஷேபங்கள் செய்துகொண்டும், ஸ்ரீஆண்டாள் சந்நதி கைங்கரியங்களில் விசேஷமாய் ஈடுபெற்றவராயும் எழுந்தருளியிருந்தார். அச்சுவாமிகளுக்குமுன் எழுந்தருளியிருந்த ஸ்வாமிகள் அவருடைய குணாதிசயங்களையும், வித்வத்துவத்தையும் கேள்வியுற்று தமக்குப் பின்னிட்டு இவரே தம்முடையப்பட்டம் வகிக்கத்தகுந்தவரென் றெண்ணித் தம்மிடத்திலேயே அழைப்பித்துக்கொண்டார்கள். அவர்விசேஷபலவந்தத்தின் பேரில் அந்தபீடத்தைவகித்து திருநாடலங்கரித்தார்.

இப்போது இருபத்துநாலாவதுபட்டத்தை வகித்த ஸ்வாமிகள், திருநாடலங்கரித்த ஸ்வாமிகள் போன்றே எல்லாவிதசத்திகளையும், சிஷ்யாபிமானமும், பரமாநுக்கிரகமுடையவராய் பல்லாண்டாய் எழுந்தருளி ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தமகிமையை யோங்கச்செய்வாராக—சுபம்.

800

ஔவையார் நீதிவாக்கியம்.

(கசுஅம் பக்கத்தொடர்.)

தீவினையகற்று.

பொருள்.

தீவினை=பாவச்செயல்களை

அகற்று=நீசெய்யாமல் விலக்கு.

கருத்து—பிறர் நோகத்தக்க பாவச்செய்கைகளை நீ விலக்கியிருந்தால் உனக்கொரு கேடுமுண்டாகாது.

குறளுதாரணம்.

அருங்கேடனென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

பொருள்.

மருங்கோடி=(ஒருவன்) கொடியவழியிலே சென்று

தீவினை=தீவினைகளை

செய்யானெனின்=செய்யானாயின்

அருங்கேடனென்பது=(அவன்) இல்லாதகேட்டையுடையவ னென்பதை

அறிக=அறியக் கடவன்.

கருத்து—ஒருவன் செவ்வையான வழியைத்தொட்டு, தீவினையாகிய பாவஞ்செய்யாதிருப்பானாகிற் கேடில்லாதவனென்றறியக்கடவன்.

கட்டுக்கதைகள்.

துரிஞ்சலும் காட்டுப்பூனையும்.

ஒருகாட்டுப்பூனைத் துரிஞ்சலைப்பிடிக்கவே, அதுதன் பிராணரக்ஷித்தியம் வேண்டிக்கொண்டது. அதற்குக் காட்டுப்பூனை கூடாது கூடாது பட்சிகளுக்கு நான் கிருபைசெய்வதில்லையென, துரிஞ்சலானது, ஆ! நான் சுண்டெலியென்றறியீரோ! என் தேகத்தைப் பாருமென்று சொல்லி அவ்வேளையில் தப்பித்துக்கொண்டு, மற்றொரு காட்டுப்பூனையினிடத்தில் அகப்பட்டு, அதன்கிருபைக்காக வேண்டிக்கொண்டது. அதற்குக் காட்டுப்பூனையானது கூடாது, சுண்டெலிக்குக் கிருபைசெய்வதில்லையென, துரிஞ்சலானது நல்லது என்னிறகுகளினால் நான் பட்சியென்றறியலாமென்று சொல்ல, அப்படியே யிவ்விரண்டு தன்மையினாலுந் தப்பித்துக்கொண்டது.

நீதி.

சூட்சுமபுத்தியால் நம்மை நெருங்கிவரும் அபாயங்களில் நின்றும் எப்போதுந் தப்பித்துக்கொள்ளலாம்.

பொதுவாயிருந்த துரிஞ்சல்.

பட்சிகளுக்கும், மிருகங்களுக்கும் ஓர் சந்தேகிக்கத்தக்க துணிகரமான சண்டையுண்டானதின்பேரில் மிருகங்கள் கெலித்ததைக் காணும்பரியந்தம் துரிஞ்சல் பொதுவாயிருந்து, அப்பால் அந்த பலத்த கட்சியிற்போய்ச் சேர்ந்தது. ஆனால் பின்பு பட்சிகள் தங்களிற் சிதறிப்போன சேனைகளைச் சேர்த்துக்கொண்டுவந்து ஜெயமடையும்படி நேரிட்டபடியால் அக்கட்சியில் துரிஞ்சலோடிப்போய்ச் சேர அவ்விடத்தில் யுத்தசபையில் அதைச் சிநேகிதத் துரோகியென்று விசாரணைசெய்து உரிஞ்சித்துரத்தி மறுபடியும் பகல்வெளிச்சத்தை யெப்போதும் பார்க்கக்கூடாதென்று கடைசியில் தீர்ப்புகொடுத்தனர்.

நீதி.

எந்தக்கட்சியிலும் எதார்த்தவாதியாயில்லாதவன் எல்லாராலும் இகழப்படுவான்.

கோநாயும், நுழைநரியும்.

ஒருகோநாய் மிகுதியாய் இரைகளைச்சேகரித்து வைத்துக்கொண்டு தன்னிருப்பிடத்தை விட்டுப்போகாதிருக்க, அந்நாய்இல்லாதசமயம் நெடுநாளாகப் பார்த்துக்கொண்டிருந்த ஓர் நுழைநரி சிநேகிதா! இப்போதெப்படியிருக்கின்றாய்? வேட்டையில் வெகுநாளாய் உன்னைக் காணாமலிருக்குங் காரணமென்ன! என்றுகேட்க; கோநாயானது, நான் ஒரு வியாதியினால் வீட்டிலேயே யிருக்கவேண்டியிருக்கிறது, ஆகலால் நான்சொல்லப்படும்படி நீபிரார்த்திப்பாயென, அந்நரிதன்தந்திரஞ் செல்லாதிருப்பதைக்கண்டு ஓரிடையனிடத்திற்குச்சென்று கோநாயைச் சடுதியிற்போய் பிடிக்கும்படியான இடத்தைத் தெரிவிக்க, அவ்விடையன் அது சொன்னபடியே கோநாயைக் கொன்றுவிட்டான். உடனே நரியானது அக்குகைக்குட்சென்று அதுசேகரித்துவைத்திருந்த வஸ்துக்களைச் சுவாதீனப்படுத்திக்கொண்டது ஆனால் சீக்கிரத்தி லவ்விடையன் கோநாயைக் கொன்றதுபோல் அந்நரியையுங்கொன்றபடியால், அச்சுவாதீனத்தில் ஒரு சந்தோஷத்தையு மடையவில்லை.

நீதி.

ஒருவனுக்குத்துரோகஞ்செய்பவனுக்கும் பிறகு அவனுக்கு தகுந்ததீங்கு சம்பவிக்குமென்று இக்கதை நமக்குத்தெரிவிக்கின்றது.